<u>**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.**</u>

<u>**CC No. 134/2019**</u>

2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 01 ஆம் நாள் புதன் கிழமை அரசு தரப்பு சாட்சி–05, திரு.சௌந்தராஜன் என்பவரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 56 வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.செ.சாஸ்தா குமரன், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. சௌந்தராஜன் | வயது | : | 45 /26 |
| த.பெ. | : | கலியமூர்த்தி | தொழில் | : | கூலி |
| ஊர் | : | பிலாஞ்சேரி | நிலை | : | LW05/ PW05 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

**(3 வது எதிரி ஆஜர். 1, 2 எதிரிகள் ஆஜரில்லை. அவர்கள் தரப்பு வழக்கறிஞரால் மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது)**

<u>**முதல்விசாரணை:**</u>

நான் பிலாஞ்சேரியில் வசித்து, கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் கு/வி.**

எதிரிகள் எனது ஊரைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். கடந்த 19.07.2017 ம் தேதி மாலை சுமார் 04.00 மணியளவில், எங்கள் ஊர் முக்கியஸ்தர்கள் முன்னிலையில் சுடுகாடு பிரச்சனை சம்மந்தமாக பேசிக்கொண்டிருந்தபோது, எதிரிகள் அங்கு வந்து

தகாத வார்த்தைகளால் திட்டி, ஜனகரை கட்டையால் தாக்கினார்கள் என்றும், அதை நானும் அங்கிருந்தவர்களும் விலக்கிவிட்டதாகவும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு,தற்போது வழக்கு சம்பவத்தை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–** இல்லை

**மறு விசாரணை – இல்லை**

/ உண்மை நகல் /

ஒம்/-ப.கனிமொழி,

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1,

ஜெயங்கொண்டம்.